**அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுக்கு,**

**ஒரு பகிரங்கக் கடிதம்**

15.07.2009

ஊடகங்களுக்கெதிராக பாரியளவில் அதிகரித்து வரும் வன்முறைகள் தொடர்பாக சர்வதேச ஊடக சமூகத்தின் பிரதிநிதிகளைக் கொண்ட இலங்கையின் ஊடக சுதந்திரத்திற்கான சர்வதேச குழு தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

எவ்வாறெனினும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பெற்ற இராணுவ வெற்றி உருவாக்கிய வன்மம் நாட்டின் ஊடக சுதந்திர நிலைமையினை படிப்படியாகச் சீர்குலைத்து வருவது தொடர்கிறது.

தமிழ் ஊடகங்கள் தொடர்ச்சியாகச் சந்தித்து வந்த மனவேதனை தரும்படியான தாக்குதல்களில் இருந்தும், அதில் பணியாற்றியவர்களுக்கு விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல்களில் இருந்தும் அவர்களைப் பாதுகாக்கும் வகையில் தாங்கள் அண்மையில் விடுத்த அறிக்கையை நாங்கள் வரவேற்கிறோம்.

எவ்வாறெனினும், இலங்கையின் ஊடகவியலாளர்களும் சிங்கள, தமிழ், ஆங்கில ஊடக நிறுவனங்களும் ஜனநாயக உரிமைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் அனுபவிப்பதற்கு உடனடியாக ஆற்ற வேண்டிய பல விடயங்கள் இருப்பதாக நாங்கள் கருதுகிறோம்.

இலங்கையின் பத்திரிகைச் சூழல் எதிர்நோக்கும் இடர்ப்பாட்டை களையுமுகமாக ஊடக சுதந்திரத்திற்கான சர்வதேசக் குழு 11 அம்சங்களடங்கிய ஒரு திட்டத்தை தங்களுக்கும் தங்களுடைய அரசாங்கத்திற்கும் பிரேரிக்க விரும்புகிறது.

**அவையாவன:-**

1. ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாகவும், அவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது தொடர்பாகவும் புலன் விசாரணை செய்து, குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பாதவாறு அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தும் வகையில் முழுமையான சுயாதீனமான விசேட வழக்குத் தொடுநர் அலுவலகம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். 2007 இலிருந்து ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். இதுவரை எந்தவொரு கொலை தொடர்பாகவும் விசாரணைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

2. ஊடக சுதந்திரம் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் ஆகியவற்றின் சர்வதேச நியமங்களின்படி எல்லா ஊடகவியலாளர்களும் பாதுகாப்பாகப் பணியாற்றுவது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். குறிப்பாக விரைவில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள வவுனியா மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் இது உடனடியாக உறுதிப்படுத்தப்படல் அவசியம்.

3. 2008ஆம் ஆண்டு மார்ச்சிலிருந்து அவசர காலச்சட்டத்தின் கீழும் அதன் பின்னர் 2006ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களான ஜே.எஸ்.திஸநாயகம் மற்றும் அவருடைய சகபாடிகளான வி. ஜசிகரன், விவளர்மதி ஆகியோர் உடனடியாக விடுதலை செய்யப்படுதல் வேண்டும். ஊடகவியலாளர்களுக்கும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கான செயற்பாட்டாளர்களுக்கும் எதிராக பொலிஸாரினாலும், அரசாங்கத்தினாலும் கொண்டு வரப்பட்ட நியாயப்படுத்த முடியாத எல்லாவகையான முறைப்பாடுகளையும், வழக்குகளையும் விலக்கிக் கொள்ளல் வேண்டும். சட்டபூர்வமான ஊடகப் பணியில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களைத் தண்டிக்கும் விதமாக பயன்படுத்தப்பட்ட சட்ட ஏற்பாடுகளை பயங்கரவாதத்திற்கெதிரான சட்ட ஏற்பாடுகளின் கீழ் காணப்படுபவற்றையும் கூட இரத்துச் செய்தல் வேண்டும்.

4. 2009ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை விசாரணை தொடர்பான முதற்கட்ட முடிவுகளை வெளியிடுதல் வேண்டும்.

5. சுதந்திரமாகவும், நியாயமாகவும் அறிக்கையிடும் வகையில் எல்லா ஊடகங்களும் இடம்பெயர்ந்த முகாம்களுக்குச் சென்று வர பூரணமாகவும், நிபந்தனையற்ற முறையிலும் அனுமதி வழங்கப்படல் வேண்டும். நிரந்தரமான சமாதானத்தை உருவாக்குவதற்கும் மீள்கட்டுமானம், மீளிணக்கம் ஆகியவற்றின் உண்மையான விளைவுகளை அடைவதற்கும் ஊடகங்கள் உயிர்பான பங்கை ஆற்ற முடியும்.

6. ஊடகவியலாளர்களையும், பத்திரிகை ஆசிரியர்களையும், வெளியீட்டாளர்களையும் நீண்ட காலம் சிறையில் அடைக்கக் கூடியதும் குற்றவியல் சட்டங்களின் கீழ் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தவும், தண்டனை வழங்கவுமான அதிகாரத்தைக் கொண்ட 1973ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பத்திரிகைக் கவுன்சில் சட்டத்தினை இரத்துச் செய்தல் வேண்டும். பதிலாக, ஜனநாயக பயில்முறைமைகளின்படி ஏற்கெனவே இருந்த சுய ஒழுக்கப் பொறிமுறையை பலப்படுத்த ஊடகங்களை அனுமதிக்க வேண்டும்.

7. ஒரு ஜனநாயக சமூகத்தில் ஊடகத்தின் முக்கிய பாத்திரத்தையும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தையும் உணர்த்தும் வகையில் பொலிஸ், இராணுவம் மற்றும் புலனாய்வுத்துறையினருக்கு பயிற்சிகளை அறிமுகப்படுத்த வேண்டும். 2007 இலிருந்து பாதுகாப்புப் படையினர் ஆகக் குறைந்தது 30 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களை அச்சுறுத்தியதற்கும், தாக்கியதற்கும், கடத்தியதற்கும் பொறுப்பானவர்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

8. பாதுகாப்புப் படையினரால் ஊடகவியலாளர்கள் சட்ட ரீதியற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டதற்கும் தாக்கப்பட்டதற்கும் அல்லது துன்புறுத்தல்களுக்கு உள்ளானதற்கும் நிதி ரீதியான நட்டஈடு வழங்குமாறு தீர்ப்பளிக்கப்பட வேண்டும்.

9. 2006ஆம் ஆண்டு மனித உரிமைச் சபையில் இலங்கை அரசாங்கம் உறுதியளித்த ஏற்பாடுகளுக்கு அமைய கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்திற்கான ஐ.நாவின் விசேட பிரதிநிதியை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைத்தல் வேண்டும்.

10. ஊடகச் சுதந்திரச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சுதந்திரமான ஊடகவியலாளர்களுக்கு எதிரான நேரடியான வாய்மொழி மூலத் தாக்குதல்களையும், அச்சுறுத்தல்களையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதை அரசுக்குச் சொந்தமான ஊடகம் உறுதிப்படுத்துதல் வேண்டும். இந்த ஊடகங்களால் ஒழுக்கவியலுக்கு முரணான வகையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான ஊடகங்கள் என சில ஊடகங்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வெறுத்து ஒதுக்கப்பட்ட பிரச்சாரத்தினால் பல ஊடகவியலாளர்களுடைய உயிர் தேவையற்ற விதத்தில் ஆபத்தான நிலையிலுள்ளது.

11. பொதுமக்களுடைய நலன்களைப் பேணும் வகையில் பலமான தகவல்கள் அறிந்து கொள்ளும் உரிமைக்கான சட்டத்தைக் கொண்டு வருவதன் ஊடாகவும், ஒலிபரப்பு சட்ட விதிகளை ஒழுங்குபடுத்துவதன் ஊடாகவும் சுதந்திரமான ஊடகச் சூழல் ஒன்றை உருவாக்கும் வகையிலும் ஏற்கனவே உள்ள அரச ஊடகங்களை சுதந்திரமான பொதுச்சேவை ஊடகங்களாக மாற்றும் வகையிலும் அடிப்படையான சட்ட ரீதியான மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்துதல் அவசியம்.

நீங்கள் எதிர் நோக்கும் இலக்கு மிகப்பெரியது என்பதை நாங்கள் அறிவோம். ஆனால் இலங்கையின் எதிர்கால ஜனநாயகத்தினையும் அதன் வளர்ச்சியையும் உறுத்திப்படுத்த நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களென நாங்கள் நம்புகிறோம். ஐக்கியப்பட்ட இலங்கையினை மீள கட்டமைப்பதற்கு முன் நிபந்தனை ஊடக சுதந்திரத்தைப் பலப்படுத்தலாகும்.

நீங்கள் இவ்விடயங்கள் குறித்து உங்களின் தனிப்பட்ட முயற்சிகள் ஊடாக நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஊடகவியலாளர்கள் அச்சமின்றியும், சுதந்திரமாகவும் பணியாற்ற ஏதுவான சூழலை உருவாக்க உங்களுடைய அரசாங்கத்தை ஊக்கப்படுத்துவீர்கள் என உலகெங்குமுள்ள முன்னணி ஊடக சுதந்திர அமைப்புகளாகிய நாங்கள் நம்புகிறோம்.

2006 ஒக்ரோபர், 2007 ஜூன், 2008 ஒக்ரோபர் ஆகிய காலங்களில் சர்வதேச சுதந்திர ஊடகக் குழு இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது. அது 12 சர்வதேச ஊடக சுதந்திரத்திற்கான அமைப்புகளையும், ஊடகத்தினை அபிவிருத்தி செய்வதற்கான நிறுவனங்களையும் கொண்டிருக்கிறது.

ARTICLE 19
Committee to Protect Journalists (CPJ)
International Federation of Journalists (IFJ)
International Media Support (IMS)
International News Safety Institute (INSI)
International Press Institute (IPI)
Reporters Without Borders (RSF)
World Association of Newspapers and News Publishers (WAN-IFRA)
World Press Freedom Committee (WPFC)